...gistered as a Newspaper in Ceylon...

# ஐக்கியதீபம்

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையின் வெளியீடு

மலர் : 27
இதழ் : 7

யாழ்ப்பாணம்
1972
பங்குனி

## கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான புத்தகங்களும் பத்திரங்களும்

கீழே காட்டப்பட்டிருக்கும் பட்டியலிலுள்ள புத்தகங்களும், பத்திரங்களும் எங்களிடம் விற்பனைக்கிருக்கின்றன. தங்கள் தேவைகளை எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | கடன் மனுப்பத்திரம் ... ... | -04 |
| 2. | கடன் முறிப்பத்திரம் ... ... | -05 |
| 3. | மத்தியஸ்தத்திற்கு மனு ... ... | -03 |
| 4. | கேள்விப் பத்திரம் ... ... | -05 |
| 5. | அங்கத்தவர் பாஸ் புத்தகம் (நாணய சங்கம்) ... | -25 |
| 6. | ப. நோ. கூ. சங்கப் பாஸ் புத்தகம் ... ... | -50 |
| 7. | அங்கத்தவர் பேரேடு ... ... | 8-00 |
| 8. | பொதுப் பேரேடு (நாணய சங்கம்) ... | 3-50 |
| 9. | ,, ,, (பண்டசாலை) ... ... | 9-00 |
| 10. | கடன் இடாப்பு ... | 4-00 |
| 11. | அங்கத்தவர் இடாப்பு ... ... | 2-25 |
| 12. | காசுப்புத்தகம் (நாணய சங்கம்) ... ... | 5-00 |
| 13. | ,, (பண்டசாலை) ... ... | 7-00 |
| 14. | ,, (ப. நோ. கூ. சங்கம்) ... ... | 6-00 |
| 15. | சிட்டைப்புத்தகம் 20/1 ... ... | 3-25 |
| 16. | ,, 8/1 ... | 3-75 |
| 17. | மனேஜர் பிணைப்பத்திரம் ... ... | -20 |
| 18. | பொருள் பேரேடு ... ... | 7-00 |
| 19. | அங்கத்துவ மனுப்பத்திரம் ... ... | -03 |
| 20. | பங்கு இடாப்பு ... ... | 3-50 |
| 21. | பங்குப்பணச் சிட்டை ... ... | 1-30 |
| 22. | விலைபொருள் இடாப்பு ... ... | 6-25 |
| 23. | உபவிதிகள் ப. நோ. கூ. சங்கம் ... ... | -40 |
| 24. | விவசாயக்கடன் மனுப்பத்திரம் ... ... | -10 |
| 25. | விவசாயக்கடன் முறிப்பத்திரம் ... ... | -05 |
| 26. | நெசவுச்சங்க உபவிதி ... ... | -40 |
| 27. | சமாசங்களின் கணக்குமுறை ... ... | 2-50 |
| 28. | ப. நோ. கூ. ச. சமாச உபவிதி ... | -45 |
| 29. | ரொக்கவிற்பனவுச் சிட்டை (நெசவு) ... | 2-00 |
| 30. | கடற்றொழிலாளர் கூ. க. வி. சங்க உபவிதி ... | -75 |
| 31. | நடைமுறைவிதிகள் (கடற்றொழிலாளர் சங்கம்) | -75 |
| 32. | உறுப்புரிமை விண்ணப்பப்பத்திரம் ... | -05 |
| 33. | நியமன விண்ணப்பம் இல. 2 ... ... | -04 |
| 34. | ,, இல. 3 ... ... | -04 |
| 35. | கொள்வனவு பாஸ் புத்தகம் ... ... | -75 |
| 36. | கூட்டுறவுக்கொடி (பெரியது) ... ... | 5-00 |
| 37. | ,, ,, (சிறியது) ... | 2-00 |
| 38. | ஊழியர் சகாயநிதி-பத்திரம் 'சி' புத்தகம் ... | 5-00 |

**வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபை**

காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

# இந்த இதழில்

ஆசிரியர் தலையங்கம் 3

கள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் உபவிதிகள் 5

ஐக்கியங்கள் மேலோங்குமே! 10
—வே. ஐயாத்துரை

கூட்டுறவைத் தனியான பாடமாகப் போதிப்பதன் நன்மைகள் 12

மட்டுப்படுத்தப்பட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க உபவிதிகள் 14

காரியாலய ஒழுங்கு முறை 20

கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மறுசீரமைப்பு 24

கடற்றொழிலாளருக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே உதவி 31

# உங்கள் தேவைக்கான
# எமது உற்பத்திப் பொருள்கள்

- ✶ திறம் செயற்கைப் பட்டுப் புடவைகள்,
- ✶ சாயம் மங்காத உறுதியான கைத்தறிச் சேலைகள், சாரங்கள், விரிப்புகள்.
- ✶ சுவைமிக்க பிஸ்கட், கேக், பாண், பணிஸ் வகைகள்.
- ✶ குழந்தைகளுக்கான அழகழகான உடைகள்.

## பிற பொருட்கள்

- ✶ *உணவுப் பொருள்கள்*
- ✶ *கட்டடப் பொருள்கள்*
- ✶ *அலுமினியப் பாத்திரங்கள்*
- ✶ *புடவைகள், சேட் வகைகள்*
- ✶ *நீர் இறைக்கும் இயந்திரங்கள், உதிரிப் பாகங்கள்*
- ✶ *பூச்சி கொல்லி, களை கொல்லிகள்*

**குறைந்த விலையில் எங்களிடம் கிடைக்கும்.**

*எமது உற்பத்திப் பொருள்களை வாங்கும் வியாபாரிகளுக்கு விசேட கழிவுகள் வழங்கப்படும்.*

**பண்டத்தரிப்பு கோவிற்பற்று**
**ப. நோ. கூ. சங்கம்**
**பண்டத்தரிப்பு.**

// ஐக்கிய தீபம்

''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு''

ஆசிரியர்: து. சீனிவாசகம், B.A., J.P.

| மலர் 27 | யாழ்ப்பாணம் பங்குனி, 1972 | இதழ் 6 |
|---|---|---|

# கூட்டுறவுப் பணியாளர் சேவைக் குழு

அண்மையில் மக்கள் பிரதிநிதிகள் சபை கூட்டுறவுப் பணியாளர் சேவைக் குழு நிறுவுவதற்குச் சட்டத்தினை இயற்றியமை கூட்டுறவுப் பணியாளர்களுக்கு மகிழ்ச்சியைத்தரும் விடயமாகும். கூட்டுறவுப் பணியாளர்களின் வேண்டுகோளின் பேரில், விசேடமாக இலங்கைக் கூட்டுறவுப் பணியாளர் சம்மேளனத்தின் வேண்டுகோளுன்படி ஒரு விசாரணைக் குழு திரு. இராஜா பண்டாரநாயக்கா தலைமையில் நியமிக்கப்பட்டதும், அந்தக் குழு இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று சாட்சியங்கள் பதிவு செய்ததும் வாசக நேயர்கள் அறிந்ததே. அக்குழுவின் அறிக்கைக்கிணங்கவே கூட்டுறவுப் பணியாளர் சேவைக்குழு நியமிக்கப்பட்டதாகும்.

கூட்டுறவுப் பணியாளர் சேவைக்குழு மூன்று பேரைக் கொண்டதாகும். அம்மூன்று உறுப்பினரையும் அவர்களுள் ஒரு தலைவரையும், அமைச்சர் நியமிப்பார். உறுப்பினர்கள் மூன்று வருடகாலத்திற்குக் கடமையாற்றுவார்கள். கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர் அல்லது முன்பு பணியாற்றியவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டுறவுப் பணியாளரின் சம்பளத்திட்டங்கள், சேவை நிபந்தனைகள் ஆகியவற்றில் அக்கறை கொண்

டுள்ள தொழிற் சங்கங்கள் அல்லது உத்தியோகத்தர் கழகங்களைச் சேர்ந்தவர்கள் ஆகியோர் இக்குழுவில் இடம் பெறமாட்டார்கள்.

இந்தச் சேவைக் குழுவே கூட்டுறவுச் சங்கங்களில் எத்தகைய கட்டுப்பாடுகளில், எத்தகைய சம்பளத் திட்டங்களிலே பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்பதைத் தீர்மானிக்கும். ஒரு கூட்டுறவுச் சங்கத்தில் நியமிக்கப்படும் பணியாளன் குறைந்தது இரண்டு வருடகாலமாவது குறித்த சங்கமிருக்கும் மாவட்டத்தில் வாழ்பவராக இருத்தல் வேண்டும். ஒரு கூட்டுறவுச் சங்கம் தனது பணியாளனை அச் சங்கத்தின் ஒரு வேலைத் தலத்திலிருந்து இன்னொரு வேலைத் தலத்திற்கு மாற்ற உரித்து வைத்திருக்கும்.

இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சம்மதித்து ஒரு சங்கத்திலுள்ள பணியாளர் மற்றைய சங்கத்திற்கு மாற்றவேண்டுமென மனுப் பண்ணுமிடத்து ஆணைக் குழு அம்மாற்றத்தைச் செய்து வைக்கும்.

ஒரு கூட்டுறவுச் சங்கமோ, ஒரு பணியாளனோ இச்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள விதிகளை மீறின் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து ரூ. 1000-வரை அபராதம் விதிப்பதற்கு வழிவகுக்கப்பட்டிருக்கின்றது.

கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பணியாளர்களைத் தெரிவதற்கு இந்தச் சேவைக் குழு பரீட்சை நடாத்தலாம் அல்லது பரீட்சை நடாத்துவதற்கான ஒரு பரீட்சைக் குழுவையோ குழுக்களையோ நியமிக்கலாம்.

கூட்டுறவு ஆணையாளரின் ஆலோசனைக்கிணங்க எப்பணிக்கு எத்தராதரம் இருக்கவேண்டும் என்றும், அவற்றிற்கு ஏற்றவாறு எவ்வாறு சம்பளத்திட்டம் வகுக்கப்படவேண்டுமென்றும் சேவைக்குழு தீர்மானித்தல் வேண்டும்.

பணியாளர்களின் சேவைக் காலமுடிவில் அவர்களுக்குச் சகாயம் வழங்குவதற்குத் தேவையான பொது விதிகளை இச்சேவைக் குழுவே தயாரித்தல்வேண்டும்.

இச்சேவைக்குழுவின் சேவைகளால் கூட்டுறவு இயக்கம் சிறப்புற்று நாட்டின் சுபீட்சத்திற்கு வழி வகுக்குமென்று நம்பிக்கை கொள்ள இடமுண்டு.

# கள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் உபவிதிகள்

3. **நோக்கங்கள்:** கூட்டுறவுக் கொள்கையின்படி அங்கத்தவரின் பொருளாதார, சமுதாய நலனை விருத்தி செய்வதும், சிக்கனம், பரஸ்பர உதவி, சுய உதவி ஆகியவற்றின் உணர்ச்சியையும் பயிற்சியையும் அங்கத்தவரில் வளர்ப்பதும் சங்கத்தின் நோக்கங்களாகும்.

4. **அதிகாரங்கள்:** நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு, சங்கம் இந்த உபவிதிகளுக்கமைவாகப் பின்வருவனவற்றைச் செய்யலாம்:-

(அ) சிக்கன, சேமிப்புத் திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவருதல்.

(ஆ) கள்ளுச் சீவுவதற்காக அங்கத்தவர்களுக்கு மரங்களை ஒழுங்கு செய்தலும், ஒதுக்குதலும்.

(இ) கள்ளுச் சீவுவதற்குத் தேவையானவற்றை அங்கத்தவர்களுக்கு வழங்கல்

(ஈ) அங்கத்தவர்களால் உற்பத்தி செய்யப்படும் கள்ளினைப் பெற்று அதன் மொத்த விற்பனவுக்கும், சில்லறை விற்பனவுக்கும் ஒழுங்கு செய்தல்.

(உ) பண நிதிகளைத் திரட்டி அங்கத்தவருக்குக் கடனும் முற்பணமும் கொடுத்தல்.

(ஊ) கள்ளைச் சேகரித்துப் பயன்படுத்தி விற்றல்.

(எ) ஆணையாளரின் முன் அங்கீகாரத்துடன் நிலம், கட்டடங்கள், இயந்திரம், உபகரணம் முதலியவற்றைச் சொந்தமாக்கல், கொள்வனவு செய்தல், விற்றல்.

(ஏ) கள்ளுச் சீவல் தொழில் நுட்பங்களில் கொண்டுவரப்பெற்றுள்ள திருத்தங்களுக்கமைய மக்களைப் பயிற்றுவிப்பதற்காய பணியினைக் கைக்யேற்றல்.

(ஐ) அதன் அங்கத்தவர்களுக்காக வேலையாளர் நட்ட ஈட்டுத் திட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டுவருதல்.

(ஒ) ஆணையாளரின் முன் அங்கீகாரத்துடன் இந்

நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அல்லது அநுகூலமான எதையுஞ் செய்தல்.

**6. அங்கத்துவம்:** இதனகத்துப்பின் செய்யப்படும் ஏற்பாடுகளுக்கமைவாகப் பின்வருவோர் சங்க அங்கத்தவராவர்.

(அ) அங்கத்துவம் பெறத் தகுதியுடையவராய் பதிவுகோரும் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டு, குறைந்தபட்சம் ஒரு முழுப் பங்கு தானுமுடையவர்.

(ஆ) உபவிதி 8இன் பிரகாரம் அங்கத்தவராகச் சேர்க்கப்பட்டவர்.

(இ) ஆணையாளரின் நியமனம் காரணமாக நிருவாக சபையில் இடம் பெற்றவர்.

**7. அங்கத்துவத்துக்காய தகைமைகள்:** சங்கத் தொழிற்பரப்பினுள் கள்ளுச் சீவுந் தொழிலில் சாதாரணமாக ஈடுபட்டுள்ளவர்கள், 18 வயதுக்கு மேற்பட்டவராயின் அங்கத்துவம் பெறத் தகுதியுடையவர்.

**8. அங்கத்தவரைச் சேர்த்தல்:**

I. தகுதியுடைய ஒருவர், காரியதரிசிக்கு அங்கத்துவ விண்ணப்பஞ் செய்து, பிரவேசப்பணமாகிய ரூபா 1/- யையுஞ் செலுத்தி, உபவிதி 17 இன் பிரகாரம் அவரால் கொள்வனவு செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையின் கணக்கில் செலுத்தக் கூடியதான, குறைந்த பட்சம் முதலாந்தடவைப் பணத்தினைத்தானும் செலுத்தியவர்.

II. இவ்வாறு சேர்க்கப்படுவோரின் பெயர்களை நிருவாகசபை அடுத்துவரும் பொதுக்கூட்டத்திற்கு அறிவிக்க வேண்டும். அங்கத்துவம் பெறத் தகுதியற்றவர் அல்லது தான் நற்குணம் இல்லாதவரென்று நினைப்பவர் அங்கத்தவராகச் சேர்க்கப்பட்டதை ரத்துச் செய்யப் பொதுக் கூட்டத்திற்கு அதிகாரமுண்டு.

**9. அங்கத்தவர் பதிவேடு:**

I. அங்கத்தவராக அனுமதிக்கப்பெற்ற ஒவ்வொருவரும், அங்கத்தவர் பதிவேட்டில் கையொப்பமிடல் வேண்டும். அல்லது பெருவிரல் அடையாளத்தை இடல் வேண்டும்.

II. ஒரு சங்கத்தின் பதிவேட்டில் பெயர் காணப்படும் ஒருவர், ஒத்த நோக்கங்களையுடைய பிறிதொரு சங்கமொன்றின் அங்கத்தவராக ஆகுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

**10. அங்கத்தவரின் உரிமைகளும் கடமைகளும்:**

இவ்வுபவிதிகளிலும் தற்போதைக்கு நடைமுறையிலிருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திலும் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளும் கடமைகளும் சகல அங்கத்தவர்களையும் சார்ந்ததாகும். எனி

னும், பொதுக்கூட்டத்திற்கு அறிவிக்கப்படுமுன்னர் அங்கத்தவராகச் சேர்க்கப்பட்ட இடத்தும், பங்குப்பணத் தடவைப்பணம் 3 மாதத்திற்கு மேற்பட்ட நிலுவையில் நிற்குமிடத்தும், எந்த அங்கத்தவரும் பொதுக் கூட்டத்துக்குச் சமுகமளிக்கவோ, நிருவாக சபையில் அங்கத்துவம் பெறவோ முடியாது. நிருவாக சபை அங்கத்தவராக ஆணையாளரின் நியமனம் பெற்றவருக்கு நியமனகாலம் முடியும்வரை அங்கத்துவ உரிமைகள் உண்டு.

**11. அங்கத்தவரை இடைநிறுத்தலும் நீக்கலும்:**

அங்கத்தவரால் நியமிக்கப்பட்டவரையொழிந்த ஏனைய அங்கத்தவர் உபவிதிகளையும், நடைமுறையிலிருக்கும் சட்டத்தினையும் மீறுவாராகில் அல்லது கூட்டங்களுக்கு சமுகமளிப்பதை அடுத்து அலட்சியம் செய்வாராகில் அல்லது சங்கத்தின் நலத்திற்கெதிரிடையான வேறெதையும் செய்வாராகில் நிருவாகசபை அன்னாரை அங்கத்துவத்தினின்றும் இடைவிலக்கி மூன்று மாதத்திற்குள் அதைப் பொதுக்கூட்டத்துக்கு அறிவிக்கவேண்டும். இடைவிலக்கல் கட்டளையை நீடிக்கவும், நிறுத்தவும், ரத்துச்செய்யவும், இடைவிலக்கப்பட்டவரை சங்கத்தினின்றும் தள்ளவும், பொதுக்கூட்டத்துக்கு அதிகாரமுண்டு. பின்வரும் முறையில் மட்டும் ஓர் அங்கத்தவர் தள்ளப்படலாம்.

(அ) ஆணையாளரின் முன் அனுமதிபெற்ற தீர்மானம் கூட்டத்துக்குச் சமுகமளிப்போரின் குறைந்தபட்சம் மூன்றில் இரண்டு பங்கினரின் வாக்குகளால் ஏற்றுக்கொள்ளப்படல்.

(ஆ) சங்க அங்கத்தவரில் அரைவாசிக்கு மேற்பட்டவரால் ஏற்றுக் கொள்ளப்படும் தீர்மானம்.

ஆனால் குற்றஞ் செய்தவர் நிருவாக சபையின் அங்கத்தவராயின், அவரைத் தான் நியமித்த உத்தியோகத்தினின்றும் இடை விலக்கி அல்லது நீக்கிப் பொதுக்கூட்டத்துக்கு அறிக்கை செய்ய மட்டும் நிருவாகசபைக்கு உரிமையுண்டு. அங்கத்துவத்தினின்று இடைவிலக்கவும் சங்கத்தினின்று தள்ளவும் பொதுக்கூட்டத்துக்கே அதிகாரமுண்டு.

இடைவிலக்கப்பட்ட அங்கத்தவர் இடைவிலக்கப்பட்ட காலத்தில், அங்கத்துவ உரிமைகள் அற்றவராயிருக்க வேண்டும். ஆனால் தான் அங்கத்துவத்தினின்றும் நீக்கப்படும் விடயம் ஆலோசிக்கப்படும். பொதுக்கூட்டத்தில் பேசவும் வாக்களிக்கவும் அவருக்கு உரிமையிருத்தல் வேண்டும்.

**12. அங்கத்துவ முடிவு:**

பின்வரும் காரணங்களால் அங்கத்துவம் முடிவடையும்.

(அ) மரணம்;

(ஆ) சித்தசுவாதீனமற்றவராக அறிவிக்கப்படல்.

(இ) சங்கத்துக்கு எழுத்தில் ஒருமாத அறிவித்தல் கொடுத்து விலகல்.

(ஈ) குறைந்தபட்சம் ஒரு பங்கு தானும் இல்லாதிருத்தல்

(உ) அங்கத்தவராகச் சேர்க்கப்பட்டது ரத்துச் செய்யப்படல்.

(ஊ) விலக்கப்படல்.

(எ) அங்கத்துவ தகுதியுடைமையை இழத்தல்.

(ஏ) போதிய காரணங்களின்றி தொடர்ச்சியாக 3 மாதகாலத்துக்கு கள்ளுச்சீவுந் தொழிலில் ஈடுபடத் தவறுதல்.

(ஐ) நிருவாகசபைக்கு ஆணையாளரால் நியமிக்கப் பெற்றவர்களை பொறுத்தவகையில், ஆணையாளரின் நியமனத்தை இழத்தல்.

13. **அங்கத்தவரின் பின்னுரித்தாளிகள் :** ஆணையாளரின் நியமனம் பெற்றவரையொழிந்த ஏனைய அங்கத்தவர் ஒவ்வொருவரும் தான் இறக்கும்பொழுது தன்னுடைய பங்குகள் அல்லது உரிமை கையளித்து ஒப்புவிக்கப்படுவதற்கு ஒருவரை நியமிக்கவேண்டும். எக்காலத்திலும் நியமனத்தை இரத்து செய்து புது நியமனம் செய்ய அங்கத்தவருக்கு உரிமையிருத்தல் வேண்டும். நியமனங்கள் எழுத்தில் செய்யப்பட்டு கோவை செய்யப்படல் வேண்டும். ஓர் அங்கத்தவர் இறந்து ஓர் ஆண்டு முடியுமுன்னர் அவர் சங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கழித்துக் கொண்டு தோற்ற மதிப்புக்கு மேற்படாதவகையில் கடந்த பல வருடத்தின் முடிவில் மதிக்கப்பட்ட பிரகாரம் அவரின் பங்குகளின் பெறுமதி அவரால் நியமிக்கப்படுபவருக்கு கொடுக்கப்படல் வேண்டும். ஆனால் நியமிக்கப்பட்டவர் அங்கத்துவ விண்ணப்பம் செய்து 8—ஆம் உபவிதியின் கீழ் தகுதியுடையவராயின் அங்கத்தவராகச் சேர்க்கப்பட்டுப் பங்குகள் அவருக்கு மாற்றப்படலாம்.

14. **அங்கத்தவரின் உத்தரவாதம் :** சங்கக் கடன்களுக்கு ஓர் அங்கத்தவரின் உத்தரவாதம் அவர் கையொப்பமிட்ட பங்குகளின் தோற்ற மதிப்பின் 5 மடங்குக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகும். இந்த உத்தரவாதம் ஓர் அங்கத்தவர் அங்கத்துவத்தை இழந்த பின்னர் இரு ஆண்டுகளுக்கு வலிவுடைத்தாகும். ஆனால் விலகிய அங்கத்தவரின் உத்தரவாதம் அவர் அங்கத்துவத்தை இழந்தபொழுது சங்கக் கடனின் தொகைக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகும்.

15. **எதிரீடு:** எந்தக் கணக்கிலுமாவது சங்கத்திடமிருந்து , ஓர் அங்கத்தவருக்கு அல்லது முன் அங்கத்தவராயிருந்த ஒருவருக்கு அல்லது அவர் மூலம் உரிமையாடும் ஒருவருக்குச் செல்லவேண்டிய பணம் அத்தகைய ஒருவர் அல்லது ஓர் அங்கத்தவர் மூலம் சங்கத்துக்கு எக்கணக்கிலும் கொடுக்கவேண்டிய தொகைக்கு ஈடாகக் கணிக்கப்படலாம்.

16. **மூலதனம்:** சங்கத்தின் மூலதனம் பின்வருமாறு திரட்டப்படும்:

(1) பங்குகள் விற்றுப் பெற்ற பணம்

(2) வைப்புப் பணம்.

(3) கடன் பணம்.

(4) ஈட்டிய லாபம்.

(5) வேறு விதத்தில் பெற்ற அல்லது கிடைத்த பணம்

17. பங்குகள்:

(1) ஒரு பங்கின் பெறுமதி ரூபா. 50/-

(2) சங்கப் பங்குகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப் படலாகாது.

(3) ஆணையாளரின் நியமனம் பெற்றவரை யொழிந்த ஏனைய அங்கத்தவர் ஒவ்வொருவரும் குறைந்த பட்சம் ஒவ்வொருபங்கு வாங்கவேண்டும்.

(4) பங்களிக்கப்பட்டதும் அதன் பெறுமதி முற்றுக் கட்டப்படலாம் அல்லது மாதமொன்றுக்கு ரூபா. 5/- வீதம் தவணைப்பணங்களில் கட்டலாம். இவற்றுள் முதலாம் தவணைப்பணமானது அங்கத்தவராய்ச் சேர்க்கப்படும் பொழுது கட்டப்படல் வேண்டும். உரியமாதத்தில் கொடுக்கப்படாத தவணைப் பணம் நிலுவைப் பணமாகக் கருதப்படும்.

(5) சங்கப் பங்கு முதலின் ஐந்திலொரு பங்குக்கு மேற்பட்ட தொகையை அங்கத்தவரெவரும் வைத்திருத்தலாகாது. இந்த உபவிதி விதிக்கும் எல்லைக்கு மேற்பட்ட பங்குகளையுடையவராய் அங்கத்தவரெவரும் வருவாராகில் மேலதிக பங்குகளை விற்றுப் பணத்தை அவருடைய ஆதீனத்தில் வைத்திருக்க அல்லது சங்கத்தின் பேரில் தோற்றமதிப்பிற்கு மேற்படாத விலையில் வாங்க நிருவாக சபைக்கு அதிகாரமுண்டு.

(6) பங்குகளை எவரும்திருப்பி எடுத்தலாகாது. ஆனால் சங்கத்தின் பண வருட முடிவில் அங்கத்தவரல்லாதவரின் வைப்புப் பணம் அல்லது கடன் பணம் திருப்தியுறும் வகையில் கொடுக்கப் பட்டிருப்பின் குறித்த பண வருடம் முடியுமுன்னர் அங்கத்துவம் முடிவடைந்த அங்கத்தவருக்கு அவருடைய பங்குகளின் தோற்ற மதிப்புக்புக்கு மேற்படாத தொகை நிருவாகசபையின் தற்றுணிபுக்கேற்ப கொடுக்கப்படலாம்.

(7) ஓர் அங்கத்தவர் நிருவாகசபையின் முன் அனுமதியுடன் தனது பங்குகளை இன்னொரு அங்கத்தவருக்கு அல்லது அங்கத்துவம் அளிக்கப்பெற்றவருக்கு பிரவேசப்பணம் கட்டியவருக்கு மாற்றலாம்.

(வளரும்)

# ஐக்கியங்கள் மேலோங்குமே!

வே. ஐயாத்துரை

**பெண்:**

ஆணோடு பெண்ணைச் சேர்ப்பதற் கேபெரும்
அல்லோல கல்லோலமே—பெரும்
ஆடம்ப ரம்வேண்டுமே—நல்ல
காணிபொருள் வீடுநகை காசுகல்வி கட்டழகும்
கட்டுப்பா டும்வேண்டுமாம்—அன்பைச்
சொட்டும் குணம்வேண்டுமாம்

**ஆண்:**

சீதனத்தி னோடுகல்வி சேர்ந்திருக்கும் பெண்ணுக்குச்
சீரான ஆண்வேண்டுமே—நல்ல
சீரான ஆண்வேண்டுமே!
மாதமாதம் சம்பளத்தை வாங்குகின்ற உத்தியோக
மன்னவனை நாடவேண்டுமாம்—நல்ல
மன்னவனை நாடவேண்டுமாம்

**பெண்:**

கண்ணோடு கண்ணைச் சேர்த்துவிட் டால்வேறு
காசுகாணி தேவையில்லையே—ஏட்டுக்
கல்வியதும் தேவையில்லையே—நல்ல
பெண்ணுளும் நாற்குணம் எந்நாளும் இருந்திடில்
பேறுகும் வாழ்வினுக்கே—பெரும்
பேறுகும் வாழ்வினுக்கே!

**ஆண்:**

திண்மையுள மற்றவரின் கண்வழிசேர் காதலது
தீமைதனைச் சேர்த்துவிடுமே—தினம்
திண்டாட்டப் படவேண்டுமே—நல்ல
உண்மையுள முற்றவரின் கண்வழிசேர் காதலுக்கும்
ஊறுபல காத்திருக்குமே—தினம்
ஊறுபல காத்திருக்குமே!

**பெண்:**

சாதிமத பேதமது காதலுக்குள் ளேயிருப்பின்
சச்சரவை உண்டுபண்ணுமே—கொடும்
சச்சரவை உண்டுபண்ணுமே—இந்த
வேதனையி னுலேயுண்மைக் காதலர்கள் வாழ்வுமூல
வேரோடு வீழ்ந்துவிடுமே—வாழ்வு
வேரோடு வீழ்ந்துவிடுமே!

**ஆண்:**

அந்தஸ்தை நோக்காமல் அன்புதனைச் சீர் தூக்கின்
ஐக்கியங்கள் மேலோங்குமே—வாழ்வில்
ஐக்கியங்கள் மேலோங்குமே—காதல்
சந்தைச் சரக்கு அல்ல சிந்தித் திறங்கிநிதம்
சந்தோஷ மாகவாழுவோம்—தினம்
சந்தோஷ மாகவாழுவோம்.

★ ★ ★

# களை அழிக்கும் புல்

பயிர்களின் வளர்ச்சிக்குத் தடையாக முளைக்கும் புல் பூண்டு முதலிய களைகளை அழிக்கவல்ல சக்தி வாய்ந்த ஒருவகைப் புல்லை ஷெல் நிறுவனத்தார் கண்டு பிடித்திருக்கின்றனர். சக்திவாய்ந்த இப்புல்லை பயிர்களின் ஆரம்பகாலத்தில் பயிர்களிடையே வளரச் செய்வதன் மூலம் பயிர்களினூடே தோன்றி பயிர் வளர்ச்சியைப் பாதிக்கும் களைகளை அழித்து விடுகிறது. பின்னர் சில வாரங்களில் இப்புல்லும் தானுகவே அழிந்து விடுகிறது.

# கூட்டுறவைத் தனியான பாடமாகப் போதிப்பதன் நன்மைகள்

சசிகலா இராமலிங்கம்

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதன் தத்துவத்தை நாம் அறிவோம். முதலாளித்துவக் கொள்கைகள் விசுவரூபமெடுத்து ஏழைகளை வருத்திக்கொண்டிருந்த காலத்தில் ''ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்ற உத்தமமான கொள்கையைக் கொண்ட கூட்டுறவு உலகமெங்கும் பரவத் தொடங்கியது. தனிப்பட்டவர்கள் ஒருவரோடொருவர் போட்டியிடுவதை விடுத்து உயர்ந்ததும் சிறந்ததுமான இலட்சியங்களை ஒன்றுபட்டுழைப்பதன் மூலம்தான் பெறமுடியும்.

சனநாயகக் கூட்டுறவு இயக்கம் ஏழைகளுக்கு உதவி செய்வதையே பிரதான நோக்கமாகக் கொண்டது. கள்ள வியாபாரிகளால் நாடு நலியாமல் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது.

கூட்டுறவு பற்றிய கல்வி பாடசாலைகளில் போதிக்கப்படவேண்டும். இதனுல் 1943 இல் பொல்கொலவில் ஒரு கூட்டுறவுப் பாடசாலை நிறுவப்பட்டது.

கூட்டுறவுக் கல்வியே கூட்டுறவின் உயரிய நோக்கத்தை நிறைவேற்ற உதவும். ஏற்கெனவே வேண்டிய அறிவையும் போதிய நம்பிக்கையையும் பெற்றிராத மக்கள் தாமே வியாபாரிகள், வங்கியாளர்கள், காப்புறுதியாளர்களாகக் கடமையாற்ற எண்ணுவது மூடத்தனமாகும் எனக் கூட்டுறவுக் கல்வியின் அவசியத்தை விளக்கியுள்ளார் சார்ள்ஸ் கைத் என்னும் பெரியார்.

ஒரு கூட்டுறவு நிலையத்தின் நோக்கம் அதன் அங்கத்தவர்களின் பொருளாதார நிலையைச் சீர்ப்படுத்துவதே ஆகும். என்றாலும் அதைக்கையாள நாம் பயன்படுத்தும் சில

வழிவகைகளினாலும், ஒழுங்கு முறைகளினாலும் வேறும் சில உயரிய நோக்கங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

கூட்டுறவு இயக்கம் உண்மையாகப் பொருளாதார நடைமுறைகளைக் கையாளும் ஒரு கல்வி இயக்கமே. ''குடி மக்களுக்குக் கல்வியறிவூட்டுவதே கூட்டுறவாளர்களின் முக்கிய கடமை'' என ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் ஒரு பெரியார் குறிப்பிட்டுள்ளார். அதன் பேறுகக் கிடைக்கும் லாபத்தில் இரண்டரைவீதம் கூட்டுறவுக் கல்விக்காக ஒதுக்கி வைக்கப்பட வேண்டுமென அங்கே தீர்மானிக்கப்பட்டது.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கூட்டுறவுக் கல்வி பாடசாலைகளிலே போதிக்கப்படவேண்டியது மிகமிக அவசியம். இளைஞர்களுக்குக் கூட்டுறவுத் தத்துவத்தைப் போதித்து சிறந்த பிரஜைகளாக்க வேண்டு . பல நாடுகளில், பல்கலைக்கழகங்களில் இது ஒரு தனிப் பாடமாகப் போதிக்கப்பட்டு வருகிறது.

ஆகவே பாடசாலைப் பாடத் திட்டங்களில் கூட்டுறவு ஒரு பாடமாக இடம் பெறவேண்டியது அவசியமாகிறது. ''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்பதற்கிணங்க பாடசாலைகளில் கல்வி போதிக்கப்பட்டாற்றான் கூட்டுறவே நாட்டுயர்வு என்ற கொள்கை சிறுவயதிலேயே விதைக்கப்படும்.

பாடசாலைகளில் கூட்டுறவுப் பயிற்சியைப் போதிப்பதால் அநேக நன்மைகளை நாம் பெறலாம். முதலாவதாக மனிதனை மனிதனுக்கு வது. அதாவது சிறுவயதிலேயே தனித்தும் ஒருமித்தும் பொறுப்புணர்ச்சியை வளரச் செய்தல். தனிமனிதன் என்ற அடிப்படையில் சுயதிருப்தியைக் காண்பதுடன், பிறருடன் கூடப் பிறந்தவன் என்ற முறையில் முழுமையான சமுதாய வாழ்க்கையை வாழச் செய்வதே இதன் நோக்கமாகும். இரண்டாவதாக கூட்டுறவின் மூலம் அபிவிருத்தியடைந்து ஈற்றில் ஒரு தேசிய இனத்தை உருவாக்குதலே கூட்டுறவாளரின் மேம்பாடான இலட்சியமாகும். இதை நிறைவேற்றவல்ல ஆய்வறிவாளர்களை போதிய அளவில் தயாரித்துக் கொடுப்பதே பாடசாலைகளின் கடமையாகும்.

விசையிலும் பார்க்கத் திசையே முக்கியம்'' என்பதற்கிணங்க இலட்சிய வேட்கையுடைய இளைஞர்களைக் கூட்டுறவுக் கல்விமூலம் பாடசாலைகளில் உருவாக்கி, நாம் விரும்பும் இலட்சிய சமுதாயத்தை அமைக்க முடியும். ஒரே இனம், ஒரே குலம் என்ற பரந்த மனப்பான்மையுடன் நாட்டிற்குச் சேவையாற்றவும் முடியு .

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா என்னும் முதுமொழிப்படி உலகின் எந்தவொரு ஆக்க வேலைக்கும் நிலைக்களனாக பாடசாலைகள் இருக்கின்றன. சிறிய உள்ளங்களில் கூட்டுறவுக் கல்வியாகிய விதை விதைக்கப்படவேண்டும்.

# மட்டுப்படுத்தப்பட்ட மீனவர் கூட்டுறவுச் சங்க உபவிதிகள்

## நோக்கங்கள்

3. கூட்டுறவுக் கொள்கைகளுக்கமைய தனது உறுப்பினர்களுடைய பொருளாதார, சமூக, கலாச்சார நலன்களை முன்னேற்றுவதும் தனது உறுப்பினர்கள் மத்தியில் சிக்கனம், ஒருவர்க்கு ஒருவர் உதவி, தன்னுதவி போன்றவற்றிற்கான உற்சாகத்தையும் பழக்கத்தையும் ஊக்குவிப்பதும் இந்தச் சங்கத்தின் நோக்கங்களாகும்.

## அதிகாரங்கள்

4. இந்த உப-விதிகளுக்கு அமைய தனது நோக்கங்களைப் பின்பற்றும் அதே வேளையில் இந்தச் சங்கத்துக்கு கீழ்க் காணும் அதிகாரங்கள் உண்டு.

(அ) மீன்பிடிக் கருவிகள், பீன்பிடிச் சாதனங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள், உள்ளிணை வெளியிணை கடலக என்ஜின்கள், அவற்றின் உதிரிப் பாகங்கள், மீன்பிடிக் கலம் ஆகியவற்றை சங்கத்தின் பாவனைக்காக கொள்வனவு செய்தல் அல்லது வாடகைக்குப் பெறல்.

(ஆ) மீன்பிடிக் கருவிகள், மீன்பிடிச் சாதனங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் வெளியிணை கடலக என்ஜின்கள், அவற்றின் உதிரிப் பாகங்கள் வெளியிணை என்ஜின்களால் இயக்கப்படும் தெப்பம், வள்ளம், ஓறஸ், கண்ணாடி நூல் வள்ளம் போன்ற மீன்பிடிக் கலங்கள் என்பனவற்றை உறுப்பினர்க்கு விற்றல் அல்லது வாடகைக்கு விடல்.

(இ) சங்கங்களின் நடைமுறை விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய மீன்பிடிக் கரு

விகள், மீன்பிடிச் சாதனங்கள், மற்றும் மீன்பிடி உபகரணங்கள், உள்ளிணை வெளியிணை என்ஜின்கள், அவற்றின் உதிரிப்பாகங்கள், மீன்பிடிக் கலங்கள் என்பவற்றை சொந்தமாக வைத்திருத்தல், இயக்குதல், பராமரித்தல்.

(ஈ) ஆணையாளரின் முன் அங்கீகாரத்தோடு சங்கத்துக்குத் தேவைப்படும் சொத்துக்களை கொள்வனவு மூலமோ அன்றி வேறுவிதமோ பெற்றுக்கொள்ளுதல்.

(உ) உறுப்பினர்களதும், சங்கத்தினதும் மீன் அல்லது பதனிடப்பட்ட மீன், மீனிலிருந்து பெறப்படும் பொருட்கள், மற்றும் நீர்வாழ் பொருட்கள் ஆகியவற்றைச் சேர்த்தல், தரப்படுத்தல், பதனிடல், ஒன்றுக்கல், ஏற்றி இறக்கல், விற்றல், ஏற்றுமதி செய்தல்.

(ஊ) விற்பனைக்காகச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட மீன், பதனிடப்பட்ட மீன், மீனிலிருந்து பெறப்படும் பொருட்கள் அல்லது மற்றைய நீர்வாழ் பொருட்கள் என்பவற்றைப் பிணை வைத்து உறுப்பினர்க்கு முற்பணங்கள் கொடுத்தல்.

(எ) மீன்பிடிக் கருவிகள், மீன்பிடிச் சாதனங்கள், மற்றும் மீன்பிடி உபகரணங்கள், வெளியிணை கடலக என்ஜின்கள், அவற்றின் உதிரிப்பாகங்கள், வெளியிணை என்ஜின்களால் இயக்கப்படும் தெப்பம், வள்ளம், ஓறஸ், தும்புக்கண்ணுடி வள்ளம் போன்ற மீன்பிடிக் கலங்கள் கொள்வனவு செய்வதற்கும் மீன் பிடிக்கலகங்களைப் பழுது பார்ப்பதற்கும், உறுப்பினர்க்குக் கடன்கள் வழங்கல்.

(ஏ) மீன்பிடிக்கலங்களை அமைப்பதனைப் பொறுப்பேற்றல், மீன்பிடிக் கலகங்களைப் பழுது பார்த்தல், உள்ளிணை, வெளியிணை என்ஜின்களைப் பழுதுபார்த்தல், மீன்பிடிக்கருவிகள், மீன்பிடிச்சாதனங்கள், மற்றும் மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றை விற்பனை செய்தல், வெள்ளியிணைகடலக என்ஜின்களையும், உள்ளிணை — வெளியிணை என்ஜின்களின் உதிரிப்

பாகங்களையும், விற்பனை செய்தல்.

(ஐ) மீன்பிடிக்கும் சிறந்த முறைகளை உறுப்பினர்களுக்குக் கற்பித்தலும், நிபுணத்துவ அறிவுரை வழங்கலும்.

(ஒ) உறுப்பினர்களதும், ஊழியர்களினதும் நன்மைக்காக பதிவாளரின் அங்கீகாரத்தோடு நிதிகளை உண்டாக்குதலும், செயற்படுத்தலும்.

(ஓ) உறுப்பினர்களில் தன்னுதவி இருவயினொத்த உதவி, சிக்கனம் ஆகியவற்றிற்கான உற்சாகத்தையும், பழக்கத்தையும் ஊக்குவிப்பதற்கான மற்றும் வழிவகைகளை பதிவாளரிடமிருந்து எழுத்துமூலம் அங்கீகாரம் பெற்று செயற்படுத்தல்.

(ஔ) மீன்பிடித்தலுக்காக இடபெயர்தலை மேற்கொள்ளுதலும், மீன்பிடித்தலுக்காக இடம்பெயரும் உறுப்பினர்களுக்கு உதவுதலும்.

(அ. அ) பதிவாளரிடமிருந்து எழுத்துமூலம் பெறப்பட்ட முன்அங்கீகாரத்தோடு அவ்வப்போது ஏற்படும் எல்லாத் தொழில்களையும் மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கு ஏற்றதான தொழில்களையும் செய்தல்.

## தொழிற்படும் பகுதி

5. ..............மாவட்டத்திலுள்ள .........ஆகியன இந்தச் சங்கம் தொழிற்படும் பகுதியாகும். கடற்றொழில் இயக்குநர் அல்லது அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபரின் அங்கீகாரத்தை முன்னதாகவே பெற்று அவர்கள் விதிக்கும் நிபந்தனைகளுக்கு அமைய இந்தச் சங்கம் வேறும் பகுதிகளிலும் தொழிற்படலாம்.

## அங்கத்துவம்

6. இந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள் கீழ்குறிக்கப்படும் ஏற்பாடுகளுக்கு அமைவுடைத்தராதல் வேண்டும்.

(அ) உறுப்பினராக அனுமதி பெறுவதற்கு தகுதிகள் உடையவராகவும், இந்தச் சங்கத்தில் பதிவுசெய்ய விண்ணப்பத்தில் கையொப்பம் இட்டவராகவும், குறைந்தது ஒரு முழுப்பங்கைப் பெற்றவராகவும் இருக்கின்றவர்கள்.

(ஆ) 9 ஆம் உப-விதியின் படி அனுமதிக்கப்பட்ட உறுப்பினராக இருக்கின்றவர்கள்.

(இ) வேறு எந்தப் பதிவு பெற்ற மீன்பிடி கூட்டுறவுச் சங்கத்திலும் அது குலைவு பெற்ற நேரத்தில் உறுப்பினராகவும் சட்டமுறைப் படி தங்களின் சொத்துக்களையும் பொருள்களையும் இந்தச் சங்கத்திற்கு மாற்றுதல் செய்தவர்கள்.

(ஈ) இந்தச் சங்கம் தொழிற்படும் பகுதியிலுள்ள ஏதேனும் பதிவு பெற்ற பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

**உறுப்பினருக்குரிய தகைமைகள்**

7. (அ) (ஈ) பிரிவின்படி அனுமதிக்கப்பட்ட உறுப்பினரைத் தவிர்ந்த ஏனைய சங்க உறுப்பினர் ஒவ்வொருவரும்;

(1) .... .. இல் வழக்கமாய் வசிப்பவராயும்,

(2) நன்னடத்தை உள்ளவராயும்

(3) இறந்துபோன உறுப்பினர் ஒருவரின் உரிமைக்காரனாக இருந்தாலொழிய மற்றவர்கள் 18 வயதுக்குக் குறையாதவராயும்

(4) மீன்பிடிப்பதிலோ கடற்றொழில் துறைகளிலோ அதிக ஈடுபாடுடையவராயும்,

(5) இதே நோக்கங்கள் கொண்ட வேறு எந்தச் சங்கத்திலும் உறுப்பினராக இல்லாதவராயும் – இருத்தல் வேண்டும்.

மீன், பேணிய மீன், மீன்பிடிச்சாதனங்கள், மற்றும் மீன்பிடி உபகரணங்கள், உள்ளிணை–வெளியிணை மோட்டர்களின் உதிரிப்பாகங்கள், மீன்பிடிக்கலங்கள் என்பவற்றில் வியாபாரம் செய்பவர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட மாட்டார்கள்.

**கிளைகள்**

8. தற்காலிக பணிப்பாளர் சபை தனது நியமனத்தின்பின், கூடிய கெதியில் எந்தெந்தப் பகுதியில் கிளைப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு, கிளைக் குழுக்கள் தெரிந்தெடுக்கப்பட வேண்டும் என்பதைக் குறித்தல்வேண்டும். அப்படியான ஒவ்வொரு பகுதிக்கும் உறுப்பினர்குரிய ஒரு கிளைப் பதிவேடு தொடக்கப்பட்டு நடத்தப்படவேண்டும்.

உறுப்பினர்குரிய ஒரு கிளைப் பதிவேட்டில் பெயர் காணப்படும் உறுப்பினர்களைக்கொண்டே இந்தச் சங்கத்தின் ஒரு கிளையை அமைப்பர். இந்தச் சங்கத்தின் ஒவ்வொரு கிளைக்கும் ஒரு அலுவலகம் உண்டு. அது இச்சங்கத்தின் கிளை அலுவலகம் என்று அழைக்கப்படும். பணிப்பாளர் சபையால் ஒரு கிளைக்குரிய முகாமையாளர் நியமிக்கப்படுவார். காலத்துக்குக் காலம் கிளைகளின் எண்ணிக்கையை கூட்டிக்குறைக்க பணிப்பாளர் சபைக்கு அதிகாரமுண்டு.

**உறுப்பினராகச் சேரும் முறை**

9. (1) உறுப்பினராகும் தகுதியுடைய எவராவது உறுப்பினராவதற்கு இந்தச் சங்கத்தின் எந்தக் கிளையின் கௌரவ செயலாளருக்கோ அல்லது முகாமையாளருக்கோ விண்ணப்பித்தால் அவர் குறைந்தது ஒரு முழுப்பங்கின் பெறுமதியைக் கொடுத்தபின்போ அல்லது ஒரு பங்கின் முதல் தவணைக் கட்டணத்தைக் கொடுத்தபின்போ அந்த கிளைக் குழுவின் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப்படலாம்.

(ஆ) எந்தவொரு பதிவு பெற்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் குறைந்தது ஒரு பங்கினதேனும் முழுப்பெறுமதியைக் கொடுத்த பின்பு குறிக்கப்பட்ட பத்திரத்தில் விண்ணப்பித்தால் அது ஓர் உறுப்பினராகச் சேர்க்கப்படலாம்.

(2) 1 (அ) பகுதியின் கீழ் வரும் ஒவ்வொரு விண்ணப்பமும் இணைப்பிரதி கொண்டதாகவும், விண்ணப்பகாரரால் கையொப்பமிடப்பட்டதாயும் குறித்த பத்திரத்தில் உள்ளதாயும் இருத்தல் வேண்டும். இந்த விண்ணப்பங்களின் மூலப்பிரதி இச்சங்கத்தின் எந்தக் கிளை அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டதோ அங்கு பதிவுச்சுவடிக்காக கட்டிவைக்கப்பட வேண்டும். இவற்றின் இணைப்பிரதி அந்தக் கிளையின் கௌரவ செயலாளர் அல்லது முகாமையாளரால் தலைமை அலுவலகத்துக்கு பதிவுச்சுவடிக்கு கட்டிவைக்கப்படுதற்கு அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

(3) இச்சங்கத்தின் ஒரு கிளையினுடைய கௌரவ செயலாளர் தன்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட உறுப்புரிமை கோரும் விண்ணப்பங்களை அந்தக் கிளைக்குழுவின் அடுத்துவரும் கூட்டத்

திலேயே சமர்ப்பிப்பது அவரின் கடமையாகும். உறுப்பினராகச் சேர்வதற்குரிய தகுதிகள் இல்லாத எவருடைய விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் கிளைக்குழுவுக்கு உண்டு. அப்படி நிராகரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வார காலத்துக்குள் குறித்த விண்ணப்பகாரருக்கு பதிவுத் தபால்மூலம் அதனை அறிவிக்க வேண்டும்.

9. (4) கிளைக்குழுவினுல் உறுப்புரிமை கோரும் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்ட ஒருவர், அதற்கெதிராக இச்சங்கத்தின் பணிப்பாளர் சபைக்கு மேன்முறையீடு செய்யலாம். அப்படியானதொரு மேன்முறையீடு இச்சங்கத்தின் செயலாளருக்கோ அல்லது முகாமையாளருக்கோ பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படவேண்டும். அப்படியான மேன்முறையீட்டினை பணிப்பாளர் சபை தனது அடுத்த கூட்டத்தில் தீர்மானித்துக்கொள்ளும் ஒருவரின் மேன்முறையீடு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். பணிப்பாளர் சபையின் கூட்டத்திகதி அவருக்கு பதிவுத்தபால் மூலம் இச்சங்கத்தின் செயலாளராலோ அல்லது முகாமையாளராலோ அறிவிக்கப்படும். பணிப்பாளர் சபைக்கு பிரச்சினைகளை எடுத்துச் சொல்ல ஒவ்வொரு விண்ணப்பகாரருக்கும் உரிமையுண்டு. பணிப்பாளர் சபையின் தீர்மானமே முடிவானது.

(5) இச்சங்கத்தின் எந்தவொரு கிளைக்கும் அதற்குரிய கிளைக்குழு தெரிந்தெடுக்கும்வரை அந்தக் கிளைக்கு உறுப்புரிமை கோரி விண்ணப்பிப்பவர்களைச் சேகரிக்கும் அதிகாரம் தற்காலிக பணிப்பாளர் சபைக்கு உண்டு.

(6) பதிவு பெற்ற கூட்டுறவுச் சங்கமொன்றின் உறுப்புரிமைக்கான விண்ணப்பம் இச்சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் பதிவுச் சுவடிக்காக வைக்கப்படும்.

(வளரும்)

(முற்றொடர்)

(அரசாங்கம் வெளியிட்டுள்ள காரியாலய ஒழுங்கு முறையினைத் தழுவி எழுதப்பட்டது)

# காரியாலய ஒழுங்கு முறை

(எ) கையாளப்பட்ட மொழி எளிதில் விளங்கக் கூடியதா?

(ஏ) கடிதத்தின் "தொனி" (Tone) நாம் விரும்பிய பயனைப் பெற்றுத்தருமா? அது மரியாதையான, நடைமுறையில் அமைந்துள்ளதா?

கடிதம் மேலதிகாரியின் கையொப்பத்திற்கு அனுப்பப்படும்பொழுது, எழுதுவினைஞர் கீழே குறித்தவற்றைக் கவனிக்கவேண்டும்.

(1) வரைவுக்குறிப்பை மூலப் பிரதியுடன் ஒத்துப் பார்த்தல்.

(2) கடிதத்தில் வரும் தொடர்புக்குறிப்புகள், திகதிகள். வேறு விபரங்கள் முதலியனவற்றைச் சரிபார்த்தல்.

(3) கடிதத்தின் நகலில் தன் பெயரின் தொடர்புக்குறிப்புகள், பக்கத்தின் தொடர்பு எண் முதலியவற்றைக் குறித்தல்.

(4) கடிதத்தில் அடங்கிய விடயத்தின் தொடர்பாக சகல விபரங்களும் சரியாகவுள்ளன என்பதற்குப் பொறுப்பேற்கும் முகமாக, கடித நகலில் கையொப்பமிடும் உத்தியோகத்தரின் பதவி அச்சிட்டிருக்கும் இடத்தின்கீழ் தன் பெயரின் முதல் எழுத்துக்களை எழுத வேண்டும்.

(5) கடிதத்துடன் முக்கியமான கணக்குத் தொடர்புள்ள அட்டவணைகள் அல்லது பட்டியல்கள் அணைக்கப்படும்பொழுது, அவைகளைத் தயாரித்தவரும், அவைகளைச் சரிபார்த்தவரும். அவைகளில் தங்கள் பெயர்களின் முதல் எழுத்துக்களைக் குறிப்பிடவேண்டும்.

**கணக்குவைப்பு வேலை:**

எழுதுவினைஞர் கணக்கு வேலைத் தொடர்புள்ள விடயங்களிலும் ஈடுபட வேண்டி ஏற்படலாம். அவர் அரசாங்கத்திற்கு வருமானம் சேர்க்கும் வேலையிலோ அல்லது செலவீடு செய்யும் வேலையிலோ தொடர்புள்ள வேலைகளில் ஈடுபட்டவராயிருக்கலாம். அவர் வருமான வேலையில் தொடர்புள்ளவராயின், முக்கியமான வருமானம் ஒரு குறிப்பிட்ட திகதிக்கு முன்பே செலுத்தப்படல் வேண்டும் என்ற நியதியை மனதில் கொண்டு, குறிப்பிட்ட காலவரை முடிந்ததும், செலுத்தப்படாமலிருக்கும் வருமானத்தைப் பற்றிய விபரங்கள் அடங்கிய அட்டவணை ஒன்றைத் தயார் செய்து மேலதிகாரிக்கு அனுப்பவேண்டும். அரசாங்கம் பணம் செலுத்துவதற்குரிய உறுதிச்சீட்டுகளைச் சரிபார்க்கும் எழுதுவினைஞர் முக்கியமாகக் கவனிக்கவேண்டியன: உறுதிச்சீட்டிலுள்ள கூட்டல், கழித்தல் முதலியன சரியாகவுள்ளனவா, குறிப்பிட்டுள்ள விலைகள் முதலியன அங்கீகாரம் பெற்றவையா, நிதிப்பிரமாணங்களில்குறிப்பிட்டபடி தேவையான விசேட சான்றிதழ்கள் இணைக்கப்பட்டிருக்கின்றனவா, செலவு சரியான முறையில் உரிய வகுப்பின் செலவினமெனை வகுக்கப் பட்டுள்ளதா என்பவையே கணக்குத் தயாரிப்பில் சர்வ முக்கிய மானது. பிழையின்மையே சரியான எண்கள், தொகைகள் ஆகியவற்றை குறிக்கப்படவேண்டிய சரியான பந்தியில் சரியான பகுதியில் குறிக்கப்படுவது அவசியம். பிழையாக எழுதப் பட்ட எண்களையோ, தொகைகளையோ அழித்துச் சரிப்படுத்துவது முறையல்ல, அவ்வெண்களை கோடு அடித்து நீக்கி சரியான எண்களைச் சிவப்பு மையினால் எழுதவேண்டும்.

**கட்டுக்கோவைகளின் பாதுகாப்பு**

ஒரு எழுதுவினைஞரிடமிருந்து இன்னோர் எழுதுவினைஞர் வேலைப் பொறுப்பேற்கும் பொழுது, கடித வரவுக் குறிப்பேடு, முற்றுப்பெறாத கோவைகள், அவற்றின் சுட்டு அட்டைகள் முதலியனவற்றைக் கவனமாகப் பொறுப்பெடுத்துக் கொள்ளல் வேண்டும். பொறுப்பேற்கும் எழுதுவினைஞர் முன்பு பாவிக்கப் பட்ட கடித வரவுக் குறிப்பேட்டையே பாவிக்கவேண்

டும். கோவைகளின் நடமாட்டத்தைக் குறிக்க உதவும் சுட்டு அட்டைகளையும், அவை குறிக்கும் கோவைகளையும் கவனமாக எண்ணிச் சரிபார்த்துக்கொள்ள வேண்டும். இப்படியாகப் பொறுப்பேற்கப்பட்ட கோவைகளின் பட்டியல் தயாரிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட இருவரும் கையொப்பமிட்டு ஒவ்வொருவரும் ஒரு நகலினைப் பெற்றுக் கொள்வது அவசியம்.

புதிதாகப் பொறுப்பேற்கும் எழுதுவினைஞர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கோவைகளனைத்தையும் எண்ணிக்கை பார்த்துக் கொள்வதால், அவருக்குத் தான் பொறுப்பேற்ற வேலையிலுள்ள பழுவின் தன்மை விளங்குவது மட்டுமன்றி, தன் பொறுப்பில் வந்தடைந்துள்ள கோவைகளின் சரியான எண்ணிக்கையும் தெளிவாகும். இதனல் இரண்டுவிதமான நன்மைகள் உள.

(அ) பாதுகாப்பு– அதாவது தன்னிடம் கொடுக்கப்பட்டுள்ள கோவைகளையும், அவைகளிலடங்கியிருக்கும் கடிதங்களையும் பாதுகாவலாய் வைத்திருப்பதற்கு உதவியாயமைதல்.

(ஆ) தன்னிடம் கொடுக்கப்பட்ட பொறுப்பை உணர்ந்து, அக்கோவைகளிலடங்கியிருக்கும் விடயங்கள் அதிகாரபூர்வமான அங்கிகாரம் பெற்றவர்களுக்கன்றி ஏனையோருக்கும் செல்லாமல் தடுப்பதற்கு உதவுதல்.

கோவைகளிலிருக்கும் குறிப்புகள், உயர் அதிகாரிகளின் உத்தரவுகள், திணைக்களங்களுக்கிடையே நடந்துள்ள கடிதத்தொடர்புகள் ஆகியன யாவும் முழுமையான சிறப்புரிமைபெற்ற பத்திரங்களாகும். எனவே இவைகளை நீதிமன்றத்திலும்கூட பகிரங்கப்படுத்தவேண்டுமென எவராலும் கட்டாயப்படுத்த முடியாது. ஓர் எழுதுவினைஞரால் எழுதப்பட்ட குறிப்புக்களையோ அல்லது தகவுரைகளையோ அவ்விடயத்தில் தொடர்புமக்கறையுமுள்ளவர்கள் அறிந்து கொண்டால், அது அந்த எழுதுவினைஞருக்கு எவ்வளவு தொல்லையாகவந்தமையும் என்பதை அவர் உணர்ந்துகொள்ள வேண்டும். அதேபோல உயர் அதிகாரிகளாலும், தொடர்புள்ள ஏனைய அதிகாரிகளாலும், செய்யப்பட்ட தகவுரைகளையும், முடிவான உத்தரவுகளையும் ஏனை

யோர் அறிந்தால் எவ்வளவு சிக்கல்களும் தொல்லைகளும் உண்டாகுமென்பதை எழுதுவினைஞர் கட்டாயமாக நன்கு உணர முடியும். எனவே, கோவைகளில் அடங்கியுள்ள விடயங்களை உத்தியோகத் தொடர்பற்றவர்கள் அறிய முடியாதவரையில் கவனமெடுத்து அதன் தனித்தன்மையைப் பாதுகாப்பது எழுதுவினைஞரின் தலையாய கடமையாகும். அவர் பணியாற்றும் திணைக்களத்திலுள்ள உத்தியோகத்தர்களிலும் அதில் தொடர்பற்றவர்களுக்கு கோவைகளிலுள்ள விடயங்கள் தெரியக்கூடாதவகையில் அவர் தன் கடமையைக் கண்ணியமாகச் செய்யவேண்டியது அவசியம். இப்படிப்பட்ட பாதுகாப்பைச் செயற்படுத்துவதற்கு ஏற்ற சிறந்தமுறை எழுதுவினைஞர் தன் மேசைமேல் அவ்வப்போது தான் செய்ய வேண்டிய வேலைக்குரிய இரண்டொரு கோவைகளை மட்டுமே வைத்திருப்பதாகும். ஒவ்வோர் கோவையையும் தன் வேலை முடிந்தவுடன் உயர் அதிகாரிக்கு அனுப்பவேண்டியதை அனுப்பியும், பாதுகாப்பாக அலுமாரியில் வைக்கவேண்டியதை உடனுக்குடன் வைக்கவும் வேண்டும். ஒவ்வோர் கோவையிலும் நடவடிக்கை முடிந்ததும், அதனைக் கோவைகள் பாதுகாப்பாக வைக்கும் அறைக்கு அனுப்பிவிடல் வேண்டும்.

பதிவுத்தபாலில் வரும் கடிதங்கள் அநேகமாக முக்கியமான பத்திரங்களைத் தாங்கிவருவனவாகையால் அவைகளின் பாதுகாப்பில் எழுதுவினைஞர் முக்கிய கவனம் செலுத்தவேண்டும். ஒரு பதிவுத்தபாலுறையினுள் வரும் ஒவ்வோர் பத்திரங்களிலும், பதிவுத்தபாலின் இலக்கம் தபால் அனுப்பப்பட்ட தபாற்கந்தோரின் பெயர், அனுப்பிய திகதியான விபரங்கள் குறிப்பிடப்படவேண்டும். சில சமயங்களில் முக்கியமான பத்திரங்களைச் சிலர் எழுதுவினைஞரிடம் நேரில் கொடுப்பதும் உண்டு. இப்படியான சந்தர்ப்பங்களிலும் எழுதுவினைஞர் மிகவும் பிரத்தியேகமான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். நாள் முடிவில் அவர் தன் பத்திரங்கள், கோவைகள் ஆகியவற்றைப் பாதுகாப்பான இடங்களில் வைத்துப் பூட்டி, திறப்பைத் தன்னுடனேயே எடுத்துச் செல்ல வேண்டும்.

(வளரும்)

# கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மறுசீரமைப்பு

## பெரும் கடற்றொழிற் சங்கங்களும் நீங்களும்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை ஒழுங்குபடுத்திப் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாக நிறுவப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஏன் மறுசீரமைப்புப் பெறுகின்றன என்று நீங்கள் கேட்கலாம். கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் மறுசீரமைப்பு எவ்வாறு கடற்றொழிலாளரின் நிலையினை மேம்படுத்தும் என்றும் நீங்கள் கேட்கலாம். உங்களுக்குள் இது சம்பந்தமாக எழக்கூடிய கேள்விகளுக்குப் பதில் அளிப்பது இத்துண்டுப் பிரசுரத்தின் நோக்கமாகும்.

## ஏன் கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மறுசீரமைப்புப் பெறல் வேண்டும்

இப்போதுள்ள 272 சங்கங்களுட் பெரும்பாலானவை தமது சேவையைச் சரிவரச் செய்யமுடியாத மிக மோசமான நிலையிலுள்ளன. இக் கடற்றொழிற் சங்கங்கள் மிகவும் சிறியனவாகவும், பொருளாதார வகையில் மிகவும் அற்ப வருமான முடையனவாகவும் இருப்பது இச் சக்தியின்மைக்குக் காரணமாகும். இச் சங்கங்களுள் 69 சங்கங்கள் செயலாற்றியிருக்கின்றன. எஞ்சிய 203 சங்கங்களுட் கடற்றொழிலாளருக்குப் பயன்தரும் வகையிற் செயற்படும் சங்கங்களை விரல்விட்டு எண்ணலாம். இதனாற் கடற்றொழிலாளர் என்ற வகையிலே, நீங்கள் கடற்றொழிற் சங்கத்திலிருந்து அடைய வேண்டிய நன்மைகளைப் பெறுவது இயலாது. பொருளாதார அடிப்படையில் மிகவும் சக்தி வாய்ந்த முதனிலைக் கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவுவதன் அவசியம் இதனால் ஏற்படுகின்றது.

## எவ்வாறு மறுசீரமைப்புப் பெறுகின்றன?

உத்தேச மறுசீரமைப் பின்படி பொருளாதார முறையிற் சிக்கனமும் பயனும் ஏற்படுமாறு கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைத்து, ஒரு தேர்தற் தொகுதிக்கு ஒன்று அல்லது இரண்டு என்ற அடிப்படையிற் பதிவு செய்யப்பட்டு அச் சங்க ஆதிக்க எல்லையுடைய பிரதேசத்திற்கேற்றவாறு சேவைகள் யாவற்றையும் அச்சங்கங்கள் வாயிலாகவே செயற்படுத்த எண்ணியுள்ளோம். இப்பெரும் முதனிலைக் கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கம் கடற்றொழிற் திணைக்களம் கடற்றொழில் யாக்கம், மக்கள் வங்கி என்பவற்றுடன் நேரடிக் கொடுக்கல் வாங்கல் வேலைகளில் ஈடுபடும்.

## பெரும் முதனிலைக் கடற்றொழிற் சங்கம் எவ்வாறு செயற்படுகின்றது?

பெரும் முதனிலைக் கடற்றொழிற் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகளைச் சங்கக் கிளைகளின் மூலம் ஆற்றுகின்றது. பொதுவாக இப்போதுள்ள கடற்றொழிற் சங்கங்கள் கிளைகளாகவே தொடர்ந்து பணி புரியலாம்.

ஒவ்வொரு கிளையினதும் ஆதிக்க எல்லையுடைய பகுதி வரையறுக்கப்பட்டு, கட்டளையிடப்பட்டு ஒவ்வொரு கிளையும் உறுப்புரிமை பெறும்படியாகச் செயற்குழுவின் அங்கத்துவ நிலைக்கேற்பப் பெரும் முதனிலைக் கடற்றொழிற் சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்குப் பிரதிநிதிகளை நியமித்து அனுப்புவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

## மறுசீரமைப்பால் ஏற்படும் மாற்றங்கள் உங்களை எவ்வாறு பாதிக்கும்?

கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைப்பதால் உங்களுக்கு ஓர் இடர்ப்பாடும் ஏற்படாது. நீங்கள் பெற்றுக்கொள்ளும் மீன்பிடிக் கருவிகள், கடன் வசதிகள், ஏனைய சேவைகள் போன்ற யாவற்றையும் இப்பொழுது பெற்றுக் கொள்ளும் அதே இடத்திலிருந்தே பெற்றுக்கொள்ளலாம். உங்கள் மீன் வகைகளை நீங்கள் உறுப்பினராகவுள்ள கிளையின் வாயிலாக உயர்ந்த விலைக்கே விற்பனை செய்யலாம்.

ஏற்கனவே இணைக்கப்படும் கடற்றொழிற் சங்கமொன்றின் உறுப்பினராக நீங்கள் இருப்பின் புதிய புதிய சங்கத்தின் பங்குகளை வாங்க வேண்டியதில்லை. நீங்கள் உறுப்புரிமை வகிக்கும் சங்கத்திலுள்ள உமது பங்குப் பணம் புதிய சங்கத்துக்கு மாற்றப்படும். புதிய சங்கத்தின் ஒரு பங்கின் பெறுமதி 500/- ரூபா வாகும். ஆனால், புதிய சங்கத்தின் உறுப்பினர் உரிமைகளையும் பிற சேவைகளையும் பெறுவதற்கு முன்னர், நீங்கள் அச்சங்கத்தின் உறுப்பினருரிமை பெறுவதற்கு இணைப்பிரதியுடனான விண்ணப்பத்தை உமது கிளையினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும். இப்பொழுது நீங்கள் உறுப்பினராகவுள்ள கடற்றொழிற் சங்கத்தில் வைக்கப்பட்ட பணம் ஏதுமிருந்தால் அதுவும் புதிய சங்கத்திற்கு மாற்றப்படும். அப்பணத்தின் பாதுகாப்புக்கும் உத்தரவாதமளிக்கப்படும். நீங்கள் உங்கள் சங்கத்தாற் கடன் வசதிகளைப் பெற்றிருந்தால் அக்கடன்களைத் திருப்பிக் கொடுக்கும்போது புதிய சங்கத்திற்கே கொடுத்தல் வேண்டும். உங்கள் சங்கத்திலிருந்து உங்களுக்கு ஏதும் பணத்தொகை வரவிருந்தால் அத்தொகை புதிய சங்கத்தாற் கொடுக்கப்படும்.

பெரும் முதனிலைக் கடற்றொழிற் சங்கத்தினது உறுப்பினர் உரிமையை நீங்கள் ஒரு சங்கக் கிளையின் மூலமாகவே பெறலாம். உங்களது வாக்களிக்கும் உரிமை நீங்கள் அங்கத்துவம் பெற்றுள்ள கிளையினது பொதுக்கூட்டங்களுக்கு மட்டுமே பிரயோகிக்கப்படலாம்.

ஒன்றிணைக்கப்படும் கடற்றொழிற் சங்கமொன்றிலே இப்போது நீங்கள் உறுப்பினராக இல்லாதவிடத்தும், புதிய முதனிலைக் கடற்றொழிற் சங்கத்தின் உறுப்பினருரிமையைப் பெறக் கருதுமிடத்தும் இணைப்பிரதியுடனான விண்ணப்பத்துடன் 25/- ரூபா தவணைப் பணத்தைக் கிளை முகாமையாளரிடம் கொடுத்தல் வேண்டும். அப்போது துணை விதிகளின் பிரகாரம் வேண்டப்படும் தகைமைகள் உங்களுக்கு இருப்பின் உங்களை உறுப்பினராகச் சேர்த்துக்கொள்வார்கள்.

## மறுசீரமைப்பு தங்கள் சங்கத்தினை எவ்வாறு பாதிக்கும்?

நீங்கள் உறுப்பினருரிமை

வகிக்கும் கடற்றொழிற் சங்கம் இப்போது திருப்திகரமாகச் செயற்பட்டுவரின் அச்சங்கம் புதிதாக நிறுவப்படும் பெரும் முதனிலைக் கடற்றொழிற் சங்கத்துடன் இணைக்கப்படும். அப்போது உங்களது கடற்றொழிற் சங்கத்தின் பொறுப்புக்களும், சொத்துக்களுமுட்பட யாவும் பெரும் முதனிலைக் கடற்றொழிற் சங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்படும். நீங்கள் உறுப்பினருரிமை பெற்ற கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கம் சக்தியற்று அல்லது செயலற்றிருப்பின் அதன் பதிவு நீக்கப்படும். அதன் பின்னர் அச்சங்கத்தை கடன் ஒழித்துக் கட்டும் பொருட்டு கடன் ஒழிப்பவர் ஒருவரிடம் ஒப்படைப்பார்கள். நீங்கள் அத்தகையை சங்கத்தின் உறுப்பினராக இருப்பீர்களாயின் பெரும் முதனிலைக் கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினருரிமையைப்பெற ஒரு விண்ணப்பத்தினை அனுப்பித் தவணைப் பணத்தையும் அனுப்புதல் வேண்டும்.

**மறுசீரமைப்பிற்குப் பின் சேவையாளர்கள் என்ன நிலையில் வைக்கப் பெறுவர்?**

இப்போது சேவையில் ஈடுபட்டிருக்கும் சேவையாளர்களுக்கு மீளமைப்பிற்குப் பின் ஒரு பாதிப்பும் ஏற்படாது. கடற்றொழில் கூட்டுறவுச் சங்கமொன்றினது பதிவினை நீக்கிய பின்னர் அங்கு சேவையில் ஈடுபட்டிருந்த கூட்டுறவுச் சேவையாளர்களுக்கு அதே ஆதிக்க எல்லையில் நிறுவப்படும் புதிய பெரும் முதனிலைச் சங்கங்களிற் சேவை புரியும் சிறப்புரிமை உண்டு. கூட்டுறவுச் சேவையாளர்களின் விடயங்களை ஆராயவும், கூட்டுறவுத் சேவை பற்றிய விதப்புரைகளைச் செய்யவும் மாண்புமிகு வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு விதந்துரைக்கும் தகவுரைகளுக்கேற்பக் கூட்டுறவுச் சேவையினை அமைப்பர். இதன் விளைவாகச் சேவையாளர்களின் எதிர்காலம் மேலும் சீர்பெறும்.

**கடற்றொழிற் சங்கங்களிலே தீர்க்கப்பட வேண்டிய பிணக்குகளின் நிலை என்ன?**

பெரும் முதனிலைக் கடற்றொழிற் சங்கத்துடன் இணைக்கப் பெறும் கடற்றொழிற் சங்கமொன்றிலே தீர்க்கவிருக்கும் பிணக்குகள் இருப்பின்

அவை யாவும் புதுச் சங்கத்தின் பொறுப்புகளாகின்றன. பதிவு நீக்கப்பெற்ற கடற்றொழிற் சங்கத்தின் பிணக்குகளையும் தீர்த்தல் கடனெளிப்புக் காரரின் பொறுப்பாகவே அமையும்.

## கடற்றொழிற் சங்கங்களினுலே இப்போது வழங்கப்பட்டுவரும் அதே சலுகைகள் மறுசீரமைப்பிற்குப் பின்பும் பெறமுடியுமா?

இப்போதைய கடற்றொழிற் சங்கம் போலல்லாது மறுசீரமைப்பிற்குப்பின் உருவாகும் பெரும் முதனிலைக் கடற்றொழிற் சங்கமானது பொருளாதார வகையிற் சக்தி மிக்கதாயமைவதினுற் கூடிய திறன்மிகு சேவையினை மட்டுமன்றி, உங்களுக்கு இப்பொழுது கிடைக்கும் சலுகைகளை விட மிகக்கூடிய சலுகைகளையும் வழங்கும். நீங்கள் இப்போது சேவைகளைப் பெற்றுவரும் இடத்திலிருந்தே தொடர்ந்து புதிய சேவைகளையும் பெற்றுக் கொள்ளலாம். கடன் வசதிகள் உட்பட யாவும் நீங்கள் அதே இடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். புதிய சங்க அமைப்பின் கீழும் உங்களுக்குப் பழக்கமான நிலையங்களிலேயே உங்களது மீன் வகைகளை உயர்ந்த விலையில் விற்கக் கூடிய வசதிகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்படும். சங்க ஆதிக்க எல்லையுள் வள்ளங்களை உருவாக்கவும், பழுதுபார்க்கவும் வள்ளச் சாலைகள் நிறுவப்படவிருக்கின்றன. வள்ளப் பொறிகளைப் பழுதுபார்த்தற் சேவைகள், வேண்டிய உதிரிப் பாகங்கள், கருவிகள் ஆகியன சங்கத்தால் வழங்கப்படும். ஐஸ் உற்பத்தி, குளிர் அறைகளை உருவாக்கல், விற்பனைகள் சம்பந்தமாகப் போக்குவரத்துச் சேவைகளை ஒழுங்கு செய்தல் முதலியன கடற்றொழிற் சங்கத்தால் மேற்கொள்ளப்படும்.

## பெரும் முதனிலைக் கடற்றொழிற் சங்கத்திடமிருந்து உங்களுக்குந் தேவையான கடனைப் பெறலாமா?

பெரும் முதனிலைக் கடற்றொழிற் சங்கம் மேற்கொள்ள வேண்டிய கொள்கைகள் பற்றித் தீர்மானிக்கும். அதன் பின்னர் சங்கத்தின் மூலம் உங்களுக்

குத் தேவையான கடன் வசதிகளைப் பெறலாம். அந்தந்தப் பகுதியின் கடன் தேவைகள் பற்றியும் அந்தந்த உறுப்பினரின் கடன் தேவைகள் பற்றியும், விதப்புரைகள் செய்யும் உரிமை சங்கக் குழுவுக்கு உண்டு.

## மறுசீரமைப்பால் நீங்கள் பெறும் உரிமைகள் யாவை?

உறுப்பினர் என்ற முறையிற் கடற்ொழிற் சங்கத்தின் துணை விதிகளால் உரித்தாக்கப்படும் எல்லா உரிமைகளையும் சனநாயக முறையில் நீங்கள் பிரயோகிக்கலாம். பொதுக்கூட்டங்களிற் கலந்து கொள்ளவும், கிளைச்சங்கக் குழுக்களின் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படவும், சங்கத்தின் பதவிகளை வகிக்கவும் சங்கத்தின் பணிப்யாளர் சபைக்கு நியமினம் பெறவும் உங்களுக்கு உரிமையுண்டு.

## சங்கத்தின் முகாமைப்பணிகள் நடைபெறும் முறை யாது?

புதிய பெரும் முதனிலைக் கடற்றொழிற் சங்கத்தின் பூரண அதிகாரங்கள் யாவும் குழுப் பிரதிநிதிகள் அடங்கும் பொதுக்கூட்டத்திடமே உண்டு சங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தலும், கொள்கைகளைத் தீர்மானித்தலும், எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் செயற்படுத்த வேண்டிய திட்டமுறைகள் என்பனவற்றை முடிவு செய்தலுமுட்படச் சங்கத்தின் அலுவல்களை நிருவகித்தலும் பணிப்பாளர் சபையின் கடமைப் பொறுப்புகளாகும்.

பொது முகாமையாளர் கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக விளங்குகிறார். சங்கத்தின் குறிக்கோள்களை அடைதற்கும், உறுப்பினர்களுக்குச் சேவைகளை வழங்கவும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தலும், அச்சேவைகளை ஆற்றுதலும் பொதுமுகாமையாளரின் பொறுப்பாகும். சங்கத்தின் பணமும், ஏனைய சொத்துக்களும் முறை தவறாது உபயோகிக்கப்படவும், கடற்றொழிற் சங்கம் ஆற்றவேண்டிய சேவைகள்யாவும் சேவையாளர்களுடன் சேர்ந்து நிறைவேற்றும் பொறுப்பும் அவருடையதே. கடற்றொழிற் சங்கத்தின் பணிகள் சம்பந்தமாகவும் உறுப்பினர்களை ஊக்குவித்தலும், நிருவாகத்தின்போது உறுப்

பினர்களைத் துணைக்கோடலும், அவர் பொறுப்பே. உறுப்பினர் பங்குபற்றுதலை உறுதிப்படுத்தும் மதியுரைக் குழுக்களாகக் கிளைச் சங்கக் குறுக்கள் பணிபுரிகின்றன.

**உறுப்பினர்களின் கடமை யாது?**

கடற்றொழிற் கூட்டுறவுச் சங்கத்தின் எல்லாக் கருமங்களிலும் துணைசெய்தலும், இயன்ற அளவில் மதியுரை வழங்குதலும் உறுப்பினரின் கடமையாகும். உறுப்பினர்கள் பங்குபற்றுதலே சங்கத்தின் முன்னேற்றத்திற்கு வழிகோலும். கடற்றொழில் சங்கத்தின் அலுவல்களைப் பேரூக்கத்துடன் நிறைவேற்ற உறுப்பினர் முன்வரல் வேண்டும்.

---

# உண்மையும் பொய்மையும்

ஒருநாள் உண்மை, பொய், தீ, நீர் இவையாவும் ஓரிடத்தில் சந்தித்தன. பின்பு அனைவரும் இரை தேடக் கிளம்பின. இரையை ட பங்கு போடும் பொழுது பொய் தனக்குப் பெரும் பங்கு வேண்டும் என்ற எண்ணத்துடன் நீரிடம் வந்து ''உன்னால் தீயை அழிக்க முடியும் அல்லவா? நீ தீயை அணைத்து விடு. பின்னர் அதன் பங்கை நாம் எடுத்துக் கொள்ளலாம்'' என்று கூறியது.

நீர் பொய்யை நம்பியது. தீமேலே சென்று விழுந்து தீயை அணைத்தது. உடனே பொய் உண்மையிடம் சென்று சொன்னது:

''நீர் தீயை அழித்து விட்டது. மோசமாக நடந்து கொண்ட துரோகி அது. எனவே அதை நாம் தண்டித்தே தீரவேண்டும். நாம் இருவருமாக இரையை எடுத்துக்கொண்டு மலைக்கு ஓடி விடுவோம். நீர் கிடந்து திண்டாடட்டும்''

உண்மை பொய்யை நம்பியது. இரண்டும் சேர்ந்து மலைமீது ஏறிக் கொண்டன. நீருக்கு அவற்றைத் துரத்திப் பிடிக்க வேண்டும் என்ற வெறி இருந்தது. ஆனால் என்ன செய்வது. மலைமீது ஏற நீருக்கு எப்படி முடியும்?

மலைமீது ஏறியபின் பொய் உண்மையிடம் சொல்லிற்று:

உனக்கு இரையில் பங்கொன்றும் இல்லை. எனக்கு இனிமேல் நீ அடிமை வேலை செய்ய வேண்டும்.

இரண்டும் மோதிக் கொண்டன!

கடைசியில் அவை காற்றினிடம் நீதி கோரி வந்தன. காற்று சொல்லிற்று. ''உண்மை எப்பொழுதும் மெய்யுடன் போராடிய படியே இருக்கும். உண்மைதன் போராட்டத்தை நிறுத்தினால் பொய்தான் வெற்றியடைந்ததாக வாய்கிழியக் கூச்சலிடும். எனவே உங்கள் இருவரிடையில் போராட்டம் தவிர்க்க முடியாது.

# கடற்றொழிலாளருக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே உதவி

கடற்றொழிலாளருக்குத் தேவையான சகல உதவிகளும் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும். இவ்வாறு கடற்றொழில் கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. H. M. அபேபாலா புதிதாகப் பதிவு செய்யப்பட்ட மயிலிட்டி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் நடாத்திய பயிற்சி வகுப்பில் பேசுகையில் கூறினார்.

இலங்கை முழுவதும் இப்போது பதிவு செய்யப்பட்டுவரும் 45 கடற்றொழிலாளர்கள் ஆர்வமுடன் சேர்ந்து உண்மையாக உழைப்பதிலேயே 14 கடலோரப்பகுதிகளின் அபிவிருத்தி தங்கியிருக்கின்றது என மேலும் உரையாற்றுகையில் அவர் குறிப்பிட்டார். ஒவ்வொரு சங்கமும் தனது தொழிற்பரப்பிலே மீன்பிடி உபகரணங்களின் விற்பனை முகவராக விளங்கும் என்று தொடர்ந்து பேசுகையில் கூறிய அவர் மீன்பிடி உபகரணங்கள், வலைகள் ஆகியவற்றின் விநியோகம் தேவையானவர்கள் தக்கபடி அவற்றைப் பயன்படுத்த உதவும் என்று சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதாரத்திற்கு மீன்பிடி அபிவிருத்தி அவசியம் என்று வலியுறுத்திய திரு. அபேபாலா வ. ஐ. மே. சபை பயன்முனைப்பான மீன்பிடிக் கல்வித்திட்டத்தினை மேற்கொள்ள பூரண ஆதரவு கொடுத்து வருவதற்காக நன்றி கூறினார்.

வ. ஐ. மே. சபை நிருவாகக் காரியதரிசி திரு.

பொ. செல்வரத்தினம் பேசுகையில் கடற்றொழிலாளர் தமது பிரச்சினைகள் குறித்துச் சிந்திக்கவும், அவைகளைத் தீர்ப்பதற்கு வழிகளைத் தாமே காண்பதற்கும் இத்தகைய பயிற்சி வகுப்புக்கள் உதவுகின்றன. புதிய திட்டத்தின் கீழ் திறமையான நிருவாகமும், சரியாகக் கணக்கு வைக்கும் முறையும் நடைமுறையில் இருக்கும் என்று மேலும் பேசுகையில் அவர் கூறினார்.

கடற்றொழில் காரியாலயப் பரிசோதகர் திரு. பொ. கோவிந்தசாமி பேசுகையில் கூட்டுறவுச் சங்கங்களிடையே சிக்கணம் கடைப்பிடிக்கப் படவேண்டிய அவசியத்தினை வலியுறுத்தினார். எதிர் காலம் அவர்களின் கைகளிலேயே இருக்கின்றது என தொடர்ந்து பேசுகையில் அவர் விளக்கினார்.

திரு. H. M ஜெயசேகரா பேசுகையில் இப்போது இருக்கும் சாதனங்களும் சந்தைப்படுத்தலும் எப்படி சங்கங்கள் மூலம் பொதுவுடைமையாக்கப்படும் என்பதை விளக்கினார்.

திரு. பேரின்பம் நன்றி கூறினார்.

## எலும்பு

எலும்பு என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். இச்சொல் தமிழ் நாடெங்கும் வழங்குகின்றது. ஆயினும், இச்சொல்லின் வேரும், பொருளும் விளக்கமாகத் தெரியவில்லை. மலையாள நரட்டில் 'எல்' என்னுஞ் சொல் எலும்பைக் குறிக்கின்றது. 'எல்லு ஒடிச்சு விடும்' என்பது மலையாளத்தில் ஒரு வஞ்சின மொழி. திருக்குறளில் என்பு என்ற சொல் வழங்குதலைத் தமிழறிஞர்கள் அறிவார்கள். 'நோல்' எனற வேர்ச் சொல்லடியாக 'நோன்பு' பிறந்தாற் போன்று, 'எல்' என்ற வேர் அடியாக 'என்பு' பிறந்ததென்று கருதுதல் தவறாகாது. இலக்கிய வழக்கில் 'என்பு' என்று எடுத்தாளப்பட்ட சொல்லே உலக வழக்கில் எலும்பு என்றாயிற்று. ஆயினும் இச்சொற்களின் வேர் இன்று தமிழ்நாட்டில் காணப்படுவதில்லை. மலையாள நாட்டிலே காணப்படுகின்றது.

—டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை.—

# உருளைக்கிழங்கு உற்பத்திப்பெருக்கச் செய்கை

**1. விதைப்புக்குமுன்னர் தொற்றுநோயை நீக்கல்**

விதை கிழங்கைப் பீடிக்கும் தொற்றுநோயை நீக்க, விதையை நாட்டும் முன்னர் "செரசான்" என்னும் வித்து தொற்று நோய் நீக்கியில் பரிகரித்துப் பாவித்தல் நலம். ஒரு அவுன்ஸ் "செரசான்" தொற்று நீக்கியை 5 கலன் நீரில் கலந்து—28 இருத்தல் உருளைக் கிழங்கைப் பரிகரிக்கலாம்.

**2. பிற்கூற்று வெளிறல் நோய் (Late Blight)**

இந்நோய் ஒரு வகை பங்கசினால் உண்டாகின்றது. இதைக் கட்டுப்படுத்த "**அன்றக்கோல்**" $1\frac{1}{2}$ இருத்தல் 50 – 60 கலன் நீரில் கலந்து இலைகளின் மேற்புறமும், கீழ்ப்புறமும் நன்கு தோயும் வண்ணம் ஒரு ஏக்கருக்குத் தெளித்தல் வேண்டும்.

**3. ஆனைப் பேன்** (எப்பிலக்னே வண்டு)

உருளைக்கிழங்குச் செடியில் இருந்து இப் பூச்சியை அகற்ற

(1) பொலிடோல் E 605 — 1 அவுன்ஸ் 8 — 10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும் அல்லது

(2) பொலிடோல் M — 1 அவுன்ஸ் 8 — 10 கலன் நீரில் கலந்து பாவிக்கவும் அல்லது

(3) பொலித்தியோன் — 1 அவுன்ஸ் 4 கலன் நீரில் கலந்து பாவிக்கவும்.

**கிழங்கைத் தாக்கும் அந்திப் பூச்சி**

இதை அழிக்க லெபேசிட் 50% ஈ. சி. 1 அவுன்ஸை 5 கலன் நீரில் கலந்து ஏக்கருக்கு 60 கலன் வீதம் தெளிக்கவேண்டும்.

**எறும்புகள்**

தோட்டத்தில் எறும்புகள் காணப்பட்டால் ஒரு அவுன்ஸ் லெபேசிட் 50% ஈ. சியை 4 கலன் நீரில் கலந்து பாவிக்கலாம். இந்தக் கரைசல் 400 அடிச் சாலுக்குப் போதுமானது.

கிடைக்குமிடம்:

**வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்**

111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

## வடபகுதிக் கூட்டுறவாளர் உழைப்பின் சின்னம்

## வீரசிங்கம் மண்டபம்

அரங்க அமைப்பு ஆசன அமைப்பு

மின்னொளி அமைப்பு

அத்தனையும் கலையழகுடன் அமைந்த மண்டபம்

**வாடகைக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| **நாடகம், நடனம்** | | |
| | இரவு 5 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலம் | 250-00 |
| | பகல் ,, ,, | 200-00 |
| **இசை நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு ,, ,, | 175-00 |
| | பகல் ,, ,, | 150-00 |
| **ஏனைய நிகழ்ச்சிகள்** | | |
| | இரவு முதலாவது மணித்தியாலம் | 100-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதி நேரம்) 1 மணித்தியாலம் | 40-00 |
| | பகல் முதலாவது மணித்தியாலம் | 75-00 |
| | (மேலதிக நேரம் அல்லது பகுதிநேரம்) 1 மணித்தியாலம் | 30-00 |
| **திருமணம் – பகல் அல்லது இரவு** | | |
| | முதல் 2 மணித்தியாலங்கள் | 200-00 |
| | (மேலதிக நேரம்) 1 மணித்தியாலம் | 50-00 |
| **பிணை** | இரவு | 150-00 |
| | பகல் | 100-00 |

குறிப்பு: கட்டணம் முழுத்தொகையும் நிகழ்ச்சி நிகழவிருக்கும் திகதிக்கு முன்பே செலுத்தப்படவேண்டும்.

**வ. ஐ. மே. சபை**

12, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7238


Edited & published by T. SEENIVASAGAM, B. A., J. P. residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Northern Division Co-operative Federation, Ltd., K.K.S. Road, Jaffna and printed at N. P. Co-op. Printing & Publishing Socy., Ltd., Jaffna.